# <u>அறிவித்தல்</u> A

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "**நீதித்துறை (திருத்தம்)**" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிக்க விரும்புகிறேன்.

சட்டமூலத்தின் 12அ(1) ஆம் பிரிவு அரசியலமைப்பின் 154(ஞ)(3)(அ) ஆம் உறுப்புரைக்கு முரணாவதுடன் சட்டமூலத்தின் 12அ(1) ஆம் பிரிவிற்கு பயனுறுதியளிப்பதற்கு அரசியலமைப்பில் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டுமென கோருகின்றது. எவ்வாறயினும் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றில் உள்ளவாறு 154(ஞ) (3) (இ) உறுப்புரையின் கீழ் மாகாணங்களின் மேல் நீதிமன்றத்திற்கு இந்நியாயாதிக்கம் வழங்கப்பட்டால் இந்த திருத்த பிரிவில் உள்ள முரண்பாடு நீங்கிவிடும்.

சட்டமூலத்தின் 12அ(2) ஆம் பிரிவின் கீழ் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் பெயர்குறித்து நியமிக்கப்படுவர். இது அரசியலமைப்பின் 154(ஞ)(2) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதோடு சட்டமூலத்தின் 12அ(2) ஆம் பிரிவிற்கு பயனுறுதியளிப்பதற்கு அரசியலமைப்பில் திருத்தமொன்றை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இது மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் சட்டமூலத்தின் 12அ(2) ஆம் பிரிவு நீக்கப்பட்டு, 154(ஞ)(2) ஆம் உறுப்புரை அவ்வாறே பேணப்படுமானால் இந்த முரண்பாடு நீங்கும்.

சட்டமூலத்தில் திருத்தப்பட்ட 12அ(7) ஆம் பிரிவு அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரணானதாகும். எவ்வாறாயினும் பிரதம நீதியரசரிற்கு நிரந்தர நீதாய விளக்கமொன்றை நடத்துவதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்க அதிகாரமளிக்கப்பட்டால் இந்த திருத்தப் பிரிவின் முரண்பாடு நீங்கும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.